# தமிழ் இலக்கியங்களில் மானுட நேயம்

## (HUMANISM IN TAMIL LITERATURE)

தொகுதி-1

தேசியக் கருத்தரங்கம்

நாள் : 2022 மார்ச் 10, (வியாழக்கிழமை)

தொகுப்பு & பதிப்பு

முனைவர் ஜோ. செல்வக்குமார்

கற்போம் உயர்வோம்

தமிழ்த்துறை

இந்திரா கணேசன் கலை அறிவியல் கல்லூரி

மணிகண்டம், திருச்சிராப்பள்ளி - 620 012.

# பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் சங்கிசையும் அது மானிட வாழ்வியலில் பெறும் முக்கியத்துவமும்

**சின்னையா - சூரியகுமார்,**
முதுநிலை விரிவுரையாளர் (இசைத்துறை)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**ஆய்வுச்சுருக்கம்**

"குரல் இல்லாதவற்கு விரல்" என்ற முதுமொழி குறிப்பிடுவது போல் இயற்கையாகக் குரல் வளம் அமையாதவர்கள் முறையான பயிற்ச்சி செய்வதன் மூலமாகக் குரல் வளத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறும் முடியாதவர்கள் இசைக் கருவிகள் பயில்வதன் மூலமாக இசையில் சிறந்து விளங்க முடியும். இசைக்கருவிகள் ஏராளமாகக் காணப்படுகின்றது. அவற்றில் இயற்கையில் கிடைக்கும் ஒரு இசைக் கருவியாகிய சங்கும் ஒன்றாகும். இது தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்த ஒன்றாகும். இக்கருவியானது காத்தல் கடவுளாகிய திருமாலின் கையில் உள்ள சங்கு, சக்கரம் என்ற முத்திரைகளில் சங்கு முதன்மையானதாக் காணப்படுவதால் இது புனிதமானதாகப் போற்றப்படுகின்றது. சிவனடியார்கள் பஞ்சவாத்தியம் என்றும், கைலாய வாத்தியம் என்றும் சங்னை அழைக்கின்றனர். பொதுவாகக் கோயில் வழிபாடுகளின் போது திருப்பள்ளி எழுச்சி பாடுகின்ற மக்களின் பாரம்பரிய முறையில் சங்கு முக்கியத்துவப்படுகின்றது. சங்கு கடலில் இருந்து கிடைக்கும் பிராணியின் கூட்டிலிருந்து பெறப்படுகின்றது. இது எலும்புக் கூடுபோல அதன் தலைப்பாகத்தில் சுருளைக் குலைத்து விடாமல் ஒரு சிறு துளையிட்டு ஊதுவதற்கு பயன்படுத்துவார்கள். சங்கு அறுக்கப்பட்டு விதம்விதமான வளையங்கள் செய்வார்கள். தமிழர்களின் பண்பாட்டில் மட்டுமல்லாது வேறு மக்கள் மத்தியிலும் சங்கு சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. வங்காளத்தில் சங்கு ஒரு மங்களச் சின்னமாகும். ஒரு பெண் மங்களப்பெண் என்பதை அவள் கையில் உள்ள சங்கு வளையல்கள் கொண்டு தெரிந்து கொள்ளாம். சங்கு இடம்புரி, வலம்புரி என இரண்டு வகைப்படும். இவை இரண்டிலும் வலம்புரி சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. சங்கின் நாதம் ஓம்கார ஒலியைக் குறிக்கும். சங்குத் தீர்த்தத்தின் சிறப்புப் பற்றி பத்மபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சிறப்புக்கள் பலவற்றினைக் கொண்ட சங்கானது தமிழர்களின் காற்று வாத்தியக் கருவிகளுள் ஒன்றாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனைய இசைக் கருவிகளுக்கு இல்லாது சிறப்பு சங்கிற்கு உண்டெனலாம். ஏனெனில்

சங்கானது பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு கால கட்டத்திலும் மானிட வாழ்வில் பயன்படுத்தப்படுகின்றமை நோக்கதற்குரியது.

**கலைச்சொற்கள்:**இசை, இசைக்கருவிகள், சங்கு, சங்கிசை, இலக்கியங்கள்.

**ஆய்வின் நோக்கம்.**

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையில் இருந்து கண்டுகொண்ட இசைக்கருவிளை ஆதாரமாகக் கொண்டு தாம் உருவாக்கிய கருவிகளை நரம்புக்கருவிகள், துளைக்கருவிகள், தோற்கருவிகள், மற்றும் கஞ்சற்கருவிகள் என் நான்கு பிரிவுகளாக வகுத்திருந்தனர் அவற்றில் துளைக்கருவி வகையைச் சார்ந்த சங்கானது எவ்வாறு சிறப்பானதாக இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், தற்காலத்தில் அது மெல்ல மெல்ல மருவிச் செல்வதற்குரிய காரணங்களையும் வெளிக்கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப் படுகின்றது. இதன் மூலம் சங்கிசையின் பெருமையையும், அதன் சிறப்பினையும் அறிந்து கொண்டு மருவி வரும் இக்கருவியின் பயன்பாட்டை மேம்படுத்தி இக்கருவி மேலும் அழிந்து விடாது பாதுகாக்க முடியும்.

**ஆய்வு முறையியல்.**

இவ்வாய்வானது வரலாற்று ஆய்வினையும், விவரண ஆய்வினையும் ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றது.

**முன்னுரை.**

"வெள்ளை வெளிர் சங்கு சங்கிடவகையிற் கொண்ட
வலம்புரிந்த வின் சங்கம்
முரிச்சுரியேறு சங்கினால் கைதுவும் சீரார் வலம்புரியே"[1]

என்று சங்கின் பெருமை கூறப்படுகின்றது. சங்கிசையானது தொன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாக் காணப்படுகின்றது. தமிழ் மக்களின் வழிபாட்டு முறையில் சங்கு மிகவும் முக்கியமான கருவியாகும். ஆலய வழிபாடுகளில் இந்த வாத்தியம் ஒலிக்கப்படுவதால் அது மங்கள வாத்தியமாகப் போற்றப் படுகின்றது. மேலும் இதன் ஒலி மிக நீண்ட தூரத்திற்குக் கேட்கும் திறன் கொண்டதால் ஊர் மக்கள் எல்லோருக்கும் ஆலயத்தில் வழிபாடு ஆரம்பமாகியதை இது உணர்த்துவதற்கு மிகவும் சிறந்ததொன்றாகும். எவ்வாறு மங்கள நிகழ்வுகளில் பயன்படுத்தப் படுகின்றதோ அவ்வாறே மக்களின் இறுதிப் பயனத்திலும் சில இடங்களில் சங்கு இசைக்கப் படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறாகத் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த இக்கருவியானது காலந்தோறும் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதைத் தமிழ் இலக்கியங்களின் வழியாக அறியலாம்.

**சங்கு வாத்தியத்தின் தோற்றம்**

இயற்கையாகவே இசைக்கருவியான சங்கு வாத்தியம் கடற்பாறையில் அடிப்பட்டு முனை முறிந்து துளையுடன் கரையில் ஒதுங்கிய உயிர்ற்ற சங்கு துளையின் வழியாக காற்றுப் புகுந்து ஒலியெழுப்புவதைக் கண்ட மனிதன் அதை எடுத்து ஊதியிருக்கலாம். ஜனவரி முதல் மார்ச் வரை மற்றும் நவம்பர் முதல் ஏப்பிரல் வரை உள்ள காலம் சங்கின் இனப்பொருக்கக் காலமாகும். பெண்சங்கு இனச்சேர்க்கையின் பின் வெளிவிடும் முட்டைக் கூடு சங்குப் பூ எனப்படும். இதன் நீளம் 250 முதல் 300 மில்லிமீட்டர்வரை இருக்கும். இக்கூட்டில் குறுக்கு வாட்டில் ஒன்றின் மீது ஒன்ரென 24 முதல் 28 அரைகள் உள்ளன. ஒவ்வொறு அரைக்குள்ளும் கருவுற்ற முட்டைகள் இருக்கும். அரையின் பக்கவாட்டில் துளையுண்டு. இதன் மூலம் கருவுற்றமுட்டைகளுக்கு தேவையான உயிர்க்காற்றுக் கிடைக்கின்றது. பின்பு கூட்டினுள் இருக்கும் 10 மில்லிமீற்றர் நீளமுள்ள இளம் சங்குகள் வெளிப்படுகின்றன.

தொன்மையான நாகரிகங்களாகிய மெக்ஸிகோ, பெருசீனா, இந்தியா ஆகிய நாடுகளில் இக்கருவி வாசிக்கபட்டு வந்துள்ளதைக் காணலாம். முன்னைய காலத்தில் பஞ்ச மகா சப்த்தத்தில் ஒன்றாக காணப்பட்டதற்கு கிருஷ்ணபகவானின் கையில் பாஞ்சசண்ணியமாக சங்கு, சக்கரம் ஏந்தியமையும் பின்வரும் நாலாயிரம் திவ்வியபிரபந்தத்தில் காணக்கூடியதமாக உள்ளது.

"அங்கும் இங்கும் வானவர் தானவர் யாவரும்
எங்கும் இனையை யென்றுன்னை அறியவாகிவாறு வெற்றி
அங்கம் சேரும் பூமகள் மணமக்கள் ஆயமகள்
சங்கு சக்கரக் கையலன் என்பர் சரணமே"[2]

எனவே சங்கு எப்போது தோன்றியது என வரலாற்று ரீதியாக கூறமுடியாது நெய்தல் நிலத்துடன் தொடர்புபட்ட இவ் ஊதுகருவி அங்கு மக்களிடம் கைவந்தமையின் காரணபிற்பாடே சங்குவாத்தியம் கண்டறியப்பட்டது. என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

**இலக்கியங்கியங்களில் சங்கு.**

சங்கு பல புராண இதிகாசங்களில் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் இறைவழிபாடுகளில் இசைக்கருவியாகவும், மங்களவாத்தியக்கருவியாகவும் பயன்படுத்தி இருந்தாலும் பொதுவாக எல்லா தெய்வவழிபாடுகளிலும் கையாளப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் திருமுருகாற்றுப் படையில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

"அந்தரப் பல்லியங் கரங்கத் தின்காழ்
துயிரெழுந் திசைப்ப வால் வளை ஞரல....."

என்ற பாடல் வரிகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது என்னவெனில் பாசறையில் மன்னன் தூங்கும் வேளையில் காலையில் அவனை எழுப்பும் முகமாக திருப்பள்ளி எழுச்சிப் பாடப்படுதலும், பல்லியம், உயிர், வளை, முரசம் போன்ற வாத்தியக் கருவிகளுடன் சங்கொலிக்கப்பட்டமையயும் இசைத் துணையாக ஒலிக்கப்பட்ட சங்கொலி ஏனைய கருவிகளின் ஒலியிலிருந்து மாறுபட்டதைக் குறிக்க நரல் என்ற சொல் இடம் பெற்றிருந்ததை இப்பாடல் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது."[3]

மேலும் இறை வழிபாடுகளில்

வயங்கு கதிர் வயிரொடு வலம்புரி ஆர்ப்ப
பல் களிற்று இன நிரை புலம் பெயர்ந்து இயல் வரை
அமர்க்கண் அமைந்த அவிர் நிணப் பரப்பின்
குழூத் துமிந்து எஞ்சிய ஆண் மலி யூபமொட்டு

மேற் சொல்லப்பட்ட பாடலானது படைகளை ஆராய முன்பு வென்றமையால் எடுத்த கொடுகள் விளங்க விளக்குகின்ற கிரணங்களை உடைய கொம்பென்னும் வாத்தியத்தோடு வலம்புரிச் சங்குகளும் ஒலிக்கின்றன என்பதையும் போர் செய்யும் இடத்திற்குப் பொருந்தியவனாக விளங்குகின்ற நிலத்தையுடைய கனப்பரப்பில் சங்குகள் ஒலிக்கும் ஒலியானது நீண்ட ஒலியாக ஒலிப்பதை காணக் கூடியதாக உள்ளது."[4] இங்கு சங்கு வாத்தியத்தின் ஒலிச் சிறப்பை அறிய முடிகின்றது.

சங்கின் ஒலி மங்கள இசையாக மதிக்கப்பட்டிருந்ததைச் சங்க இலக்கியப் பாடல்களின் மூலம் காணலாம். வலம்புரியானது சங்கு இனத்தில் மிகச்சிறந்தது, கிடைப்பது அரிது. அதனை இசைக்கருவியாகப் பயன்படுத்தும் போது அதன் சிறப்பைக் காணமுடிகின்றது. சங்ககாலத்தில் இருந்தே சங்கு ஓர் இசைக்கருவியாக மதிக்கப்பட்டுள்ளது. காப்பியங்களும் அதற்கு இடம் கொடுத்துள்ளன. அது பண்ணிசைக்கு உரியதா? தாள இசைக்கு உரியதா? என்ற ஐயம் எழலாம். துளையில் ஒலிப்பது சங்கு வாத்தியம் என கம்பர் தன்னுடைய நூலில் கூறுகின்றார். அந்த வகையில் இப் பாடல் அமைகின்றது.

"ஆர்த்தன பேரிகள் ஆர்த்தான சங்கம்
சங்கினம் குமுற பாண்டில் தண்ணுமை துவைப்ப
சங்கியம் பிள கொம்பலம் பிணை சாமகீதம் நிறந்தவே"

என அதனை தாள இசைக்கருவியுடன் கூறியதோடு இருப்பத்தி மூன்று தாள இசைக்கருவிகளோடு சங்குவாத்தியக் கருவியினையும் ஒன்றாகக் கருதியுள்ளார். சரியான சங்கின் வாயின் வழியாக பண்ணிசைக்க முடியா விட்டாலும் பண்ணுக்கும், தாளத்துக்கும் தொடர்பான ஒரு வகை இசையை எழுப்ப முடியும்."[4]

"வளையொடு பயிரினை மருவின மழையென............"

என்ற பாடலின் மூலமும் அறியக் கூடியதாக உள்ளது. வளையொடு வயலிசை மருவினதாகச் சொல்லப்படுகின்றது. சங்கு வாத்தியம் முதலிடத்தைப் பெறுகின்றது என்பதையும் மங்கள இசைக்கு உரிய கருவியாக விளங்குவதையும் கம்பராமாயணம், சூளாமணி, கலிங்கத்துப்பரணி ஆகியவற்றில் மதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கலிங்கத்துப் பரணியில்.

"ஒரு வலம்புரி தழங்கொலி முழங்கி எழவே
உடன் முழங்கு பணி வம் பல முழங்கி எழவே
பருவ வந்து பல கொண்டல் பண் முழங்கி எழவே
பல வித தங்கொடு பல்லியம் முழங்கி எழவே" (கலி:பரணி)

வலம்புரி தழங்கொலியுடையதாகவும் பணிவமும் முழங்கொலி கொண்டதாகவும் காட்டியுள்ளார். சங்கினை விட வலம்புரியானது மிகவும் சிறப்புக்குரியது என்பதையும் போர்க்களத்தில் சங்கு நீண்டு ஒலிக்கப்படுவதும் சங்கின் ஒரு வித இசைத் தன்மையை உணர்த்த தமிழர் அதனை ஓர் இசைக்கருவியாக கொண்டுள்ளமையை இவ்வரிகள் மூலம் காணமுடிகின்றது. சங்கு வாத்தியத்தின் சிறப்பானது ஒரு துளையைக் கொண்டு அமைந்தாலும் பல ஆண்டுகளாக நீடித்த ஒரு இசை வாத்தியமாக இன்று வரை காணப்படுவது சிறப்பாகும்.

பண்டைய தமிழ் மக்களின் இறைவழிபாட்டுக் கருவியாக சங்கு பயன்படுத்தப்பட்டது என்று திருமுருகாற்றுப்படையில் முருகனை வணங்கும் வழிபாட்டில் சங்கு பயன்படுத்தப்பட்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நக்கீரனார் எனும் நல்லிசைப் புலவர் செந்தமிழ் தெய்வமாகிய முருகப்பெருமானைப் பாட்டுத் தலைவராகக் கொண்டு இயற்றிய பாடலில் கூறப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள் தோன்றிய காலத்தில் மட்டுமன்றி தேவாரப்பாடல்கள் தோன்றிய காலத்தில் கூட மக்கள் சங்கின் ஒலியை ஏற்றுக் கொண்டார்கள் என அறிய முடிகின்றது.

"சங்கு திரண்டு முரண்டு எழும் ஓசை தழைப்பன சங்கம் அற்ற……"

"இயம்பின்சங்கம்……"

"ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்……."

இப் பாடலடிகள் மூலம் சங்கின் ஒலியை திருவாசகம் மங்கள ஓசை என்று போற்றுக்கின்றதைக் காணலாம். அந்த வகையில் தேவாரப் பாடல்கள் தோன்றிய காலத்தில் மக்கள் சங்கொலியை மங்களமாய் ஏற்றுக் கொண்டமை அறிய முடிகின்றது."[5]

சங்கை ஊதும் போது ஆதியாக விளங்கும் "ஓம்" எனும் நாமம் எழுகின்றது. சங்கு வாத்தியம் இசைக்கப்படாமல் எந்த ஆலயமும்

காணப்படுவதில்லை. எல்லா ஆலயங்களிலும் நித்தியப் பூசையிலும் சிறப்புப் பூசைகளிலும் சங்கு வாத்தியம் எழுப்பப்படுகிறது. சங்கிசை இல்லாமல் ஆலயப் பூசைகள் இல்லை என்றே சொல்லலாம். சங்கின் வெண்மையும், அதன் தூய்மையும், அவ்விசையின் தூய்மையும் புனிதமானதெனலாம்.

**சங்கு வாத்தியத்தின் அமைப்பு**

சங்கு வாத்தியத்தின் அமைப்பானது குவிந்த முனையையும் உட்புறமாக வளைவுகளையும் உடைய ஓட்டிளைக் கொண்ட மெல்லுடலி இனத்ததைச் சேர்ந்த கடல்வாழ் உயிரினம். அந்தவகையில் சாதாரணமாக உள்ள சங்கின் அதன் சுழற்ச்சி இடப்புறம் நோக்கி காணப்படும். அபூர்வமாக சங்குகளில் வலமாக ஓடும், வலம்புரிச்சங்குகள் இயற்கையில் அதிகம் காணப்படமாட்டாது. அதிலும் வெண்சங்கு எனப்படும் பால் சங்கில் வலம் ஏற்படுவது மிக அரிதானது அதுவும் பெரிதாக காணப்படுவது இன்னும் அரிதிலும் அரிது. ஆனாலும் கூட தற்காலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளிலும், கோயில்களிலும் வலம்புரிச்சங்குகள் வாங்கி வைத்திருக்கின்றார்கள். கலைப்பொருட்கள் விற்கும் இடங்களிலும் வைத்திருப்பார்கள். பூசைக்குரிய பொருட்கள் விற்கும் ஒவ்வொறு கடையிலும் நூற்றுக்கணக்கில் வலம்புரிச்சங்கு வைத்திருக்கிறார்கள்.

**சங்கு வாத்தியம் இசைக்கும் முறை**

மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒரு வாத்தியமாக சங்கு வாத்தியம் அன்றைய காலத்திலும் சரி, இன்றைய காலத்திலும் சரி சொல்லப் போனால் தமிழர்களுக்கென்று உரித்தான ஒரு இசைக்கருவியாகக் காணப்படுகின்றது. திருவெம்பாவை, திருப்பள்ளிஎழுச்சி, பலதுார செய்திகளை அறிவிப்பதற்கும், கோயில் வழிபாடுகளில் இசைப்பதையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

சங்கினைக் கைகளை மூடிப் பிடிக்க வேண்டும். ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகியவை உள்ளங்கைக்குள் அடங்கியிருக்குமாறு மடக்கி பிடிக்க வேண்டும். சங்கின் உட்புறச்சுழற்சி எந்தக் கையின் விரல்களில் உட்புறச் சுழற்சியோடு ஒத்து இருக்கிறதோ அந்தக் கையை வலக்கையுடன் ஒத்து இருந்தால் அது வலம்புரிச் சங்காகும்.

ஒரே ஒலியினைக் கொண்டு இருந்தாலும் ஒவ்வொருவரும் வாசிக்கும் போது மாறுபட்ட வகையில் ஒலித்தன்மைகள் காணப்படுகின்றன. அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில் எல்லோராலும் வாசிக்க முடியாது. ஏனெனில் சங்கு இன்று இல்லாமல் அருகிப் போகும் நிலையோ, வாசித்துக் கற்றுக் கொள்வதற்கு கடினமாக இருப்பதோ காரணமாக அமையலாம்.

அதே வேளை பெண்கள் ஊதும் போதும் ஆண்கள் ஊதும் போதும் வித்தியாசமான மாறுபட்ட ஒலி அமைப்பைக் கொண்டிருக்கும். கூடுதலாக சங்கு ஊதுபவர்கள் தடிப்பான உடலை ஒத்தவர்களும், பெரும் மூச்சினை

உடையவர்களும் சத்தமாக வாசிக்கக் கூடியவர்கள். இதனை ஊதும் போது "பூப்" என்ற ஒலியினைக் காணக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில் சங்கு வாத்தியம் வாசிக்க முற்படும் போது ஏற்படுகிறது.

நெடுந்தூரம் கேட்கும் ஒலியமைப்பைக் கொண்டிருப்பதோடு இன்று அவற்றை அழகுபடுத்தி மெருகூட்டிக் காண்பிக்கிறார்கள். சிலர் தெய்வீகத் தன்மையோடும், கலைஞர்கள் வாத்தியக்கருவியாகவும், பௌத்தர்கள் புனித சின்னமாகவும் பயன்படுத்துகிறார்கள். இசைக்கும் முறையைப் பொறுத்த வரையில் சங்கு ஒரு துளைக்கருவியாக காணப்பட்டாலும் இதன் ஒலிச் செலுத்துகையின் தூரம் பல மைல்களுக்கு அப்பாற் கடத்தப்படுகிறது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். அந்த வகையில் தமிழ் மக்களின் பாரம்பரியமான இசைக் கருவியான சங்கு கலாச்சார சமயங்களோடும், சம்பிரதாயங்களோடும் இன்றும் மருவி இசைக்கப்படுகிறது எனலாம்.

சங்கின் சுளியின் மூளையிலே ஒரு துளை செய்து வாயை வைத்து ஊதினால் ஒரு சிறப்பான ஒலிப்புடன் கூடிய தொனி நிறைந்த பூம் என்ற ஓசையும் அவ்வோசை நெடுந்தூரம் கேட்கும். இவ்வாறு ஊதும் இசைக்கருவியாக காணப்படுகிறது. உலோக உறுப்புக்களால் செய்து பெறுவதுண்டு. ஊதுகின்ற இடத்தில் வாய் போன்ற உறுப்பை அமைப்பார்கள். ஊதுவோர் குழலில் ஊதி ஒலியை எழுப்புவார். சங்கை இடக்கையில் ஊதிக் கொண்டு வலக்கை விரல்களைச் சங்கில் உட்புகுத்தியும் இழுத்தும், உயர்த்தியும், தாழ்த்தியும் ஒலி வேறுபாடுகளை உண்டாக்குவார். சங்கு கோயில் வாத்தியங்களோடு இசைக்கப் பெறும் சந்தக்குறிப்பையும், தாள விஸ்தரிப்பையும் தந்து எழுச்சிக்கு காரணமாகின்றது.

## ஆலய வழிபாடுகளில் சங்குவாத்தியத்தின் பங்களிப்பு

மக்கள் பாரம்பரிய வாழ்வோடு கலைநிகழ்வுகள், தெய்வ வழிபாடுகள் முதலியவற்றில் சங்கு வாத்தியம் மிகவும் பங்களிப்பு செய்து வந்துள்ளது. அந்த வகையில் இந்து சமயப் புராணங்களோடு இது சம்பந்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் மங்கள இசைசக்கருவியாக முழங்கப்பட்டது. திருப்பள்ளி எழுச்சிப் பாடும் போதும் இறைவனின் மகிமையை எடுத்துக் கூறும் போதும் வாசிக்கப்படுகின்றது.

இசைக்கருவியான சங்கு வாத்தியத்தை மிகப் புனிதமானதாக எண்ணுவர். ஆலய வழிபாடுகளிலும், நன்மை, தீமையான பல்வகைச் சடங்குகளிலும் இதை வாசித்து வருகிறார்கள். போர்முகத்தில் இது மிக முக்கியமாக முழங்கப்படுகின்றது. திருமாலின் ஐம்படைகளுள் இதுவும் ஒன்றாகக் குறிக்கப்படுகின்றது. இவ் இலச்சினையை வைனவ அடியார்கள் தோள் முதலிய இடங்களில் பொறித்துக் கொள்வர். ஆலயங்களில் சங்கொலி எழுப்புவதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு. மங்களகரமான நேரத்தில் வழிபாட்டின் நடுவே தேவையற்ற பேச்சுக்களோ, ஓசையோ காதில்

விழாதவாறு மூழ்கடித்து விடும். சிறப்புப் பூசைகள் முடிந்த பிறகு புனிதமான நாட்களிலும் ஆராத்தியின் பொழுது சங்கு ஊதப்படும். அதுபோல் கோயில்களிலும் நீர் வழங்குவதற்கும் பயன்படுகிறது. சங்கினால் செய்யப்பட்ட அபிசேக நீர் சங்காபிசேகம் ஆகும். மண்குடத்தை விட செப்பினால் செய்யப்பட்ட குடம் 1000 மடங்கு சிறப்பானது.

கடலூர் மாவட்டத்தில் பண்டிருப்பு வட்டம் என்ற திருவதிகையில் உள்ள ஸ்ரீ விரட்டானேஸ்வரர் கோயிலுக்கு திருச்சியைச் சேர்ந்த ஒருவர் வலம்புரிச் சங்கை கொடையாக அளிக்கப்பட்டதை அந்த சங்கில் திருப்பள்ளி உடையான் என பொறிக்கப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து கோயில் வழிபாட்டில் சங்கு வாத்தியம் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது என்று அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது."[6]

இவ்வாறு கோயில்களில் பல வாத்தியங்களுடன் சங்கு வாத்தியமும் இசைக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் திருக்கோயில்களில் பூசை காலங்களில் வாசிக்கப்படும் 18 வகையான இசைக்கருவிகளில் சங்கும் இடம் பெறுகிறது. அதே போல் செய்யூர் திருக்கோயில்களிலும் சர்வவாத்தியம் என்னும் பெயரில் காற்றுக்கருவிகளும், தோற்கருவிகளும் இணைந்தும், தனித்தும் வாசிக்கப்படுகின்றன. திருச்சின்னம், பூரி, நபரி, நாதஸ்வரம் போன்ற வாத்தியங்களுடன் இணைந்து சங்கு வாத்தியமும் வாசிக்கப்படுகிறது. சங்கு வாத்தியத்தை இந்து ஆலயத்தில் மட்டுமல்லாது பௌத்த ஆலயங்களிலும் புனிதமானதாகப் பயன்படுத்துகின்றார்கள். அவ்வாறே இஸ்லாம் மார்க்கத்திலும் சங்கு பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

**தற்காலப் பயன்பாடு.**

தொன்று தொட்டு சிறப்பான வாத்தியமாகப் பயன்படுத்தப் பட்டுவரும் சங்கானது இந்தியாவில் மட்டுமல்லாது தமிழர்கள் வாழுகின்ற நாடுகளில் உள்ள இந்து ஆலயங்களில் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றது. அதிலும் குறிப்பாக இலங்கை யாழ்ப்பாண நல்லூர் முருகன் கோயிலில் இன்றும் முருகன் வீதி உலா வரும் போது மல்லாரி வாசிப்பார்கள். அதன் பின் சங்கின் ஒலி மிகத் தத்துருபமாக (பூவப், பூவப், பூவப்) என்னும் ஓசை ஒலியை எழுப்பியவாறு மேளதாள வாத்தியங்களுடன் எழுந்தருளி இருக்கும் சுவாமியை மூன்று முறை வலம் வருகின்றார்கள். அவ்வாறே யாழ்ப்பாணத்தில் நயினை நாகபூஷனி அம்மன் ஆலய கும்ப பூசை நேரத்தில் சிறப்பாக சங்கு வாசிக்கப்படுகின்றது. ஆலய கொடியேற்ற காலத்திலும், கும்பபூசை வேளையிலும், ஸ்தம்ப பூசை வேளையிலும் சங்குவாத்தியமானது வாசிக்கப்படுகின்றது. ஸ்தம்ப பூசை வேளைகளில் தவிலுடன் இணைந்து சங்கு வாத்தியம் வாசிக்கப்படுகிறது. இவ் ஆலயத்தில் ஸ்தம்பபூசை வேளையில் தவிலில் என்ன சொற்கட்டு வாசிக்கப்படுகின்றதோ அதே மாதிரி சங்கு வாத்தியம் வாசிக்கப்படுவது சிறப்பாகும்.

மேலும் மடங்களில் அமுதுப் பூசை நடத்தும் போதும் சங்கூதுவார்கள் இவர்களை பண்டாரிகள் என அழைப்பது மரபாகும். திருவெம்பாவை நடைபெறுகின்ற 10 நாட்களும் ஊரில் உள்ள சிறுவர்களும், இளைஞர்களும் சேர்ந்து அதிகாலை வேளையில் மக்களைத் தயில் எழுப்புவதற்காக சங்கு ஊதுவார்கள் இவர்களைச் சங்கூதிகள் என்று மக்கள் அழைப்பார்கள். சங்கூதிகள் வீதி உலா வேளைகளில் ஒவ்வொரு திருவெண்பாவை பாட்டு முடிவடைந்தும் சங்கு, சேமக்கலம் என்பன வாசிப்பார்கள். அவ்வாறே கோயில்களிலும் ஒவ்வொரு பாடல் முடிந்ததும் சங்கொலி எழுப்பி சுவாமிக்கு தீபாராதனை செய்யப்படும். சங்காபிசேகம் செய்வதற்கு 108, 1008 சங்குகளில் பால் ஊற்றி அதனை அபிசேகம் செய்வர். இவ்வாறாக ஆலயங்களில் தற்காலத்தில் சங்கு வாத்தியம் சிறப்பாக இசைக்கப்படுவதையும், அதன் முக்கியத்துவத்தையும், பயன்பாட்டையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## தொகுப்புரை முடிவுகள்.

தமிழ் மக்கள் தொன்று தொட்டு இன்றுவரை பயன்படுத்திய இசைக் கருவிகளை நரம்புப் கருவிகள், துளைக் கருவிகள், தோற் கருவிகள் மற்றும் கஞ்சற் கருவிகள் என வகைப்படுத்திப் பார்க்க முடியும் அவற்றுள் துளைக்கருவி வகையைச் சார்ந்த முக்கிய கருவிகளுள் சங்கும் ஒன்றாகும். இக்கருவி மானிட வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதன் இசைச் சிறப்பும், பயன்பாடும் ஆரம்பம் முதல் மனிதனின் இறுதி வரை பின்னிப் பிணைந்துள்ளது என்பதை மேலே குறிப்பிட்ட இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நாம் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அந்த அடிப்படையில் சங்கின் இசைச் சிறபப்பு பற்றிய இவ்வாய்வின் மூலம் இக்கருவி உலகில் பல மக்கள் பயன்படுத்தினாலும் இது தமிழ் மக்களின் தனித்துவமான கருவி என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

## அடிக்குறிப்புச் சான்று.

1. தேவகி மனோகரன், தமிழிசை அரங்கக் கருவிகள்,பக் - 03
2. தொன்மைச்சான்றுகள் புரப்படுத்தும் ஆடலமைதி, பக் - 10
3. இந்திய இசைக்கருவூலம், பக்கிரிசாமிபாரதி.கே.ஏ - பக் - 01, (2004) குசேலர் பதிப்பகம், சென்னை.
4. தொன்மைச்சான்றுகள் புரப்படுத்தும் ஆடலமைதி, பக் - 19
5. தமிழர் இசை, பெருமாள் ஏ. என், , பக்.எண் - 25 (1984) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
6. தேவகி மனோகரன், தமிழிசை அரங்கக் கருவிகள், பக் - 03
7. மேலது 05